# பரீட்சகரின் அறிக்கை

# AA2 பரீட்சை – 2019 யூலை

# (AA21) உயர் நிதிக் கணக்கீடு

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

இவ்வினா 20 புள்ளிகளுக்கான கட்டாய வினாவாகும். உயர் நிதிக் கணக்கீட்டுப் பாடத் திட்டத்தை உள்ளடக்கும் வகையிலான அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டிருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(1.1)** இங்கு தொக்கு ஒன்றின் நிகர தேறத்தக்க பெறுமதியை எவ்வாறு கணிப்பிடுவது என்பதன் மீதான மாணவர்களது அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் வழக்கிழந்த இருப்பின் விற்பனைக்காகச் செலவிடப்பட்ட விற்பனைப் பணிசையை (தரகு) கழிப்பதற்குத் தவறியிருந்தனர்.

**(1.2)** இவ்வினா LKAS-02 தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**(1.3)** இவ்வினா 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இனைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**(1.4)** இவ்வினா ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீது நேர்கோட்டு முறையில் தேய்மானத்தை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றியும் முன்கொணரற் பெறுமதியை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றியும் பரீட்சித்திருந்தது. பரீட்சார்த்திகளின் விடைகள் திருப்திகரமானதாக இருந்தன. ஆயினும் சில பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்ட ஈற்றுப் பெறுமதியினை கழித்திருக்கவில்லை.

**(1.5)** இவ்வினா நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடொன்றை ஏற்பிசைவு செய்வதற்குத் திருப்திப்படுத்தப்பட வேண்டிய தேர்வு நிபந்தனையினைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**(1.6)** இவ்வினா தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட ஆண்டொன்றிற்கான விற்பனையை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிப் பரீட்சித்திருந்தது. சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட தகவல்களை உரியவாறு விளங்கிக்கொள்ளாத காரணத்தால் தவறான விடைகளை அளித்திருந்தனர். மொத்த இலாபம் ஆனது விற்பனையில் 20% எனத் தெளிவாகத் தரப்பட்டிருந்த போதிலும் சிலர் அதனை விற்பனைக் கிரயத்திலிருந்து எனக் கருதியிருந்தனர்.

**(1.7)** பங்குடமை வியாபாரம் ஒன்றின் இழப்பீட்டு விகிதத்தை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றி இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டிருந்தது. இழப்பீட்டு விகிதத்தின் கணிப்பீடானது சில பரீட்சார்த்திகளால் முறையாகச் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் எவ்வித செய்முறைகளையும் காட்டாது விடையளித்திருந்தனர்.

**(1.8)** இது உள்ளீட்டு / வெளியீட்டு VAT கணிப்பீடு பற்றிப் பரீட்சிக்கப்பட்ட ஒரு நடைமுறை சார்ந்த வினாவாகும். மாணவர்களின் நடைமுறை சார்ந்த அறிவு மிகவும் குறைவாக இருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் பதிவுகளை VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான பக்கத்தில் பதிந்திருக்கவில்லை. காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டவை VAT இல் உள்ளடக்கப்பட்டுத் தரப்பட்டிருந்தன. ஆனால் பலர் அதனைக் கவனத்திற் கொள்ளவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

# பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

இவ்வினா கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் தயாரிப்பது தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் கணக்கிணக்கத்தில் கழிக்கப்பட வேண்டியவைகளைக் கூட்டியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பெற்ற கழிவானது கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் அதனை மீளவும் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிந்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் பெற்ற கழிவை செலவுப் பதிவொன்றாகப் பதிந்திருந்தனர். பரீட்சார்த்திகளுக்கு எந்தெந்தப் பதிவுகளை கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு செம்மையாக்கம் செய்ய வேண்டும் என்ற விளக்கம் காணப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருக்கவில்லை.**

## வினா 03

இவ்வினா பங்குடமை வியாபாரம் ஒன்றின் இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. சில பரீட்சார்த்திகளிடம் கோட்பாட்டு அம்சங்கள் மீதான அறிவு குறைவாகக் காணப்பட்டதன் காரணமாக பகிர்வுக் கணக்கில் எடுப்பனவுகளைக் காட்டியிருந்தனர். மேலும், ஒரு சில பரீட்சார்த்திகள் இவ்வினாவில் கேட்கப்படாத பங்காளர்களின் நடைமுறைக் கணக்கைத் தயாரித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா 04

இவ்வினா மூலதனச் செலவினம் பற்றிய அறிவையும் செலவழிக்கப்பட்ட கிரயத்தை எவ்வாறு மூலதனப்படுத்துவது என்பது பற்றிய அறிவையும் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இயந்திரத்தைப் பரீட்சிப்பதற்கான மாதிரிப் பொருட் கிரயமான ரூ. 10,000/- இனை மூலதனப்படுத்தி யிருக்கவில்லை. பெரும்பாலானவர்களால் ஏனைய உருப்படிகள் மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டிருந்தன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா 05

இங்கு வங்கிக் கணக்கிணக்கம் மற்றும் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு போன்றவை தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பான பதிவுகளைச் சரியாக அடையாளங் கண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட செம்மையாக்கங்களைச் செய்வதற்கு முன்னர் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் காட்டப்பட்ட உண்மையான வங்கி மீதியை பிழையாகக் கணிப்பிட்டிருந்தனர். காசோலை இல. 150162 இற்கான சரியான தொகை வங்கிக் கணக்கிணக்கத்தில் பிழையாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது காசேட்டில் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தது. அது பெரும்பாலானவர்களால் விளங்கிக் கொள்ளப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருக்கவில்லை.**

## வினா 06

இவ்வினா அங்கத்துவச் சந்தாக் கணக்கு தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு சில பரீட்சார்த்திகள் வருமானக் கூற்றிற்கு மாற்றப்பட வேண்டிய ஆண்டிற்கான சரியான அங்கத்துவச் சந்தாவைக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். மேலும் 3 ஆண்டுகளுக்குத் தொடர்ந்தும் நிலுவையாக இருக்கின்ற அங்கத்தவர் ஒருவரின் அங்கத்துவச் சந்தா அறவிட முடியாக் கடன் ஒன்றாகக் கருதப்பட வேண்டும். அது சில பரீட்சார்த்திகளால் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்க வில்லை.

சில பரீட்சார்த்திகள் நிலுவையாக இருந்த அங்கத்துவச் சந்தாவை செலவு மீதியொன்றாக பதிவு செய்தமை போன்று அங்கத்துவச் சந்தாக் கணக்கில் பிழையான பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

இவ்வினா வியாபார நிறுவனம் ஒன்றின் நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. உரிமையாளரின் சொந்த வான் இனை வியாபாரத்திற்கு மாற்றுவதற்கான பதிவுகளைச் சரியாகப் பதிந்திராத சில பரீட்சார்த்திகள் காணப்பட்டனர். மேலும், சில பரீட்சார்த்திகள் ஆண்டின் இறுதியில் இருந்த வியாபார வருமதிகள் மீதியிலிருந்து வங்குரோத்து நிலையை அடைந்த கடன்பட்டோர் மீதியான ரூ. 75,000/- இனை கழித்ததன் பின்னர் ஐயுறவுக்கடன் ஏற்பாட்டினைச் செய்திருக்கவில்லை. சிலர் அத்தகைய செம்மையாக்கங்கள் தரப்பட்ட நிகர இலாபத்திலிருந்து கழிக்கப்பட வேண்டும் என்பதை விளங்கிக் கொண்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா 08

இவ்வினா இலாப நோக்கற்ற நிறுவனம் ஒன்றின் வருமான, செலவினக் கணக்கினைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் ஆண்டிற்குரிய அங்கத்துவக் கட்டணத்தைக் கணிப்பிடவில்லை என்பதுடன் சில பரீட்சார்த்திகள் கொள்ளல், கொடுத்தல் கணக்கில் காட்டப்பட்டிருந்த சகல கொள்ளல் மற்றும் கொடுத்தல்களையும் வருமான, செலவினக் கணக்கிற்கு எடுத்திருந்தனர். சிலர் கிரயத்தில் கணிப்பிடுவதற்குப் பதிலாக 2018 சனவரி 31 இலான கட்டட முன்கொணரற் பெறுமதியில் தேய்மானத்தைக் கணிப்பிட்டிருந்தனர். அங்கத்துவச் சந்தாவின் ஆரம்ப மற்றும் இறுதி நிலுவைகள் சில பரீட்சார்த்திகளால் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா 09

இவ்வினா பங்குடமை வியாபாரம் பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு பங்காளர் மூலதனக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகளைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப் பட்டிருந்தது.

இங்கு நன்மதிப்பானது மூலதனக் கணக்கின் ஊடாகச் சீராக்கப்பட வேண்டுமென தெளிவான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் மிகச் சில எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது அதனை நடைமுறைக் கணக்கின் ஊடாகச் சீராக்கம் செய்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வினாவின்படி, **ரணில்** வியாபாரத்திலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்திருந்ததுடன் அவரது ஓய்வின் பின்னர் செலுத்தப்பட வேண்டிய முழுத் தொகையும் மூலதனக் கணக்கின் ஊடாக கடன் கணக்கொன்றிற்கு மாற்றப்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், அறிவுறுத்தல்கள் சில பரீட்சார்த்திகளால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

சிலர் **சுனில்** இன் மாதாந்தச் சம்பளத் தொகையான ரூ. 30,000/- இனை வருடாந்தச் சம்பளமாக கருதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி D

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

### வினா 10

இங்கு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் முகாமைத்துவத்தின் பாவனைக்காக முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று என்பவற்றைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்படுகின்றன:

(1) காலப்பகுதிக்காகச் செலுத்த வேண்டிய தனிச்ச வட்டியானது சில பரீட்சார்த்திகளால் சரியாகக் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(2) வருமான வரிச் செம்மையாக்கமானது பெரும்பாலான பரீட்சார்த்திகளால் அவர்களுடைய செய்முறைகளில் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அவர்களில் பலர் கருத்திற் கொள்ளப்பட்ட ஆண்டிற்கான சரியான வரித் தொகையினையும் கணித்திருக்கவில்லை.

(3) சில பரீட்சார்த்திகளால் ஆண்டிற்கான வருமான வரியானது நிதிச் செலவுகள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(4) நிருவாகச் செலவுகள் மற்றும் விநியோகச் செலவுகளுக்கான விபரமான செய்முறைகள் சில பரீட்சார்த்திகளால் இணைக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் அவர்கள் சில புள்ளிகளை இழந்திருந்தனர்.

(5) சொத்துக்கள் மீதான தேய்மானம் சில பரீட்சார்த்திகளால் செய்முறைத் தாளில் கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை நிதிநிலைக் கூற்றில் சரியான இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(6) சில பரீட்சார்த்திகளால் அட்டுறுக்களும் முற்கொடுப்பனவுகளும் நிதி நிலைக் கூற்றில் சரியாகக் காட்டப்படவில்லை.

(7) சில பரீட்சார்த்திகளால் வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றுக்காகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவ மாதிரிகள் பின்பற்றப்படவில்லை.

(8) சில பரீட்சார்த்திகள் சில தொகைகளை ஆயிரங்களில் காட்டியிருப்பதுடன் சில தொகைகளை ஆயிரங்களில் காட்டியிருக்கவில்லை. இதனால், அத்தகைய பரீட்சார்த்திகள் பதிவு செய்யப்பட்ட தொகைகளின் துல்லியமின்மை காரணமாக புள்ளிகளைப் பெறுவதற்குத் தவறியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை விருத்திசெய்வதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தின் முழுமையான உள்ளடக்கத்தை ஆழமாகக் கற்று, ஒவ்வொரு அலகிலும் எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்தில் நல்லதொரு புரிந்துணர்வுடன் ஒவ்வொரு அலகினது அறிவையும் மேம்படுத்திக் கொள்ளவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து, சகல கணிப்பீடுகளுக்குமான செய்முறைகளைத் தெளிவாகக் காட்டவும்.

**(3)** ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்படின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

**(4)** தெளிவான கையெழுத்தில் எழுதுவதுடன் விடைகளின் இலக்கங்களையும் சரியாக எழுதவும். விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன் வினா இலக்கங்களை மீளவும் பரிசீலிப்பது கட்டாயமானதாகும்.

**(5)** வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும்.

**(6)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளில் பயிற்சி பெறுவதானது செயலாற்றுகையை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவியாக அமையும். ஒரே அமைப்பைக் கொண்ட விடயங்கள் திரும்பவும் பரிசீலிக்கப்பட முடியும். எனவே இது சகல நேரங்களிலும் நன்மையானதாக அமையும்.

**(7)** இந்த மட்டத்துடன் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களைப் படிக்கவும். இப்பாடத்திற்குரிய பாடப்புத்தகம் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றையும் அதேபோன்று பாடம் சம்பந்தமான வேறு விடயங்களையும் கற்றுக் கொள்ளவும்.

**(8)** நேர முகாமை மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவுக்கும் செலவழிக்கப்பட வேண்டிய நேரத்தை புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ள விதத்தைப் பார்த்து தீர்மானித்துக் கொள்ள முடியும்.

**(9)** நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சையில் சித்தியடையும் இயலளவு உச்ச நம்பிக்கையுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -